புதுச்சேரி அரசு

# அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை

# புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு குழுமம்

3வது தளம், புதுச்சேரி வீட்டு வசதி வாரிய வளாகம், அண்ணா நகர், புதுச்சேரி-5.

தொலைபேசி : 0413-2201256 தொலைநகல் : 0413-2203494

# பொது மக்கள் கருத்து கேட்பு அறிவிப்பு

புதுச்சேரி, வில்லியனூர் ஒதியம்பட்டில் அமைந்துள்ள இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனம், இன்டேன் பாட்டலிங் பிரிவில் ஒவ்வொன்றும் 300 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள 2 உயர்மட்ட புல்லட்டுகளை நிறுவுவதன் மூலம், உற்பத்தியை 300 மெட்ரிக் டன் கொள்ளளவில் இருந்து 900 மெட்ரிக் டன் கொள்ளளவாக அதிகரிக்க உத்தேசித்துள்ளது. புதுடெல்லி, இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை எண்.S.O.1533 தேதி :14.9.2006 படி, திட்ட உரிமையாளர் சுற்றுச்சூழல் சான்றிதழ் பெற சம்மந்தப்பட்ட துறையிடம் விண்ணப்பித்துள்ளார். சுற்றுச்சூழல் சான்றிதழ் மற்றும் செயல்முறையின் ஒரு பகுதியாக, உள்ளூர் மக்களின் கருத்துக்களை அறிந்துகொள்ள பின்வரும் விவரத்தின்படி பொது மக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் முடிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | தொழிற்சாலையின் பெயர் மற்றும் முகவரி | திட்ட விவரம் | கேட்புரையின் தேதி மற்றும் நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| 1. | இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனம், இன்டேன் பாட்டலிங் பிரிவு, ஒதியம்பட்டு, வில்லியனூர், புதுச்சேரி. | 2x300 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள உயர்மட்ட புல்லட்டுகளை நிறுவுவதன் மூலம், உற்பத்தியை 300 மெட்ரிக் டன் கொள்ளளவில் இருந்து 900 மெட்ரிக் டன் கொள்ளளவாக அதிகரித்தல். | 25.05.2017 காலை 9.00 மணி | கோபால்சாமி நாயக்கர் திருமண நிலையம், தேசிய நெடுஞ்சாலை 45A, வில்லியனூர் புறவழிச்சாலை, ஆரியபாளையம், வில்லியனூர், புதுச்சேரி-605 502. |

திட்ட உரிமையாளர் சமர்ப்பித்த சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆய்வறிக்கையின் சுருக்கம் மற்றும் வரைவு சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கையின் நகல்கள் கீழ்கண்ட அலுவலகங்களில் கிடைக்கும். இதனை அனைத்து அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

1. மாவட்ட நீதிபதி மற்றும் மாவட்ட ஆட்சியர், புதுச்சேரி.
2. உள்ளாட்சி துறை, புதுச்சேரி.
3. வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து, வில்லியனூர், புதுச்சேரி.
4. மாவட்ட தொழில் மையம், தட்டாஞ்சாவடி, புதுச்சேரி.
5. சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் பிராந்திய அலுவலகம், தென் கிழக்கு மண்டலம், சென்னை.
6. புதுச்சேரி மாசு கட்டுப்பாட்டு குழுமம், 3வது தளம், புதுச்சேரி வீட்டு வசதி வாரிய வளாகம், அண்ணா நகர், புதுச்சேரி-5.

திட்ட உரிமையாளர் சமர்ப்பித்த சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆய்வறிக்கையின் சுருக்கம் மற்றும் வரைவு சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கையின் நகல்கள் புதுச்சேரி மாசுகட்டுப்பாட்டு குழும இணைய தளத்திலும் **http://dste.puducherry.gov.in/ppccmain.htm** வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தை பற்றிய கருத்துக்களை சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் மேற்குறிப்பிட்ட புதுச்சேரி மாசுக்கட்டுப் பாட்டு குழும முகவரிக்கு எழுத்து மூலமாக அனுப்பி வைக்கலாம் அல்லது கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துக்களை தெரிவிக்கலாம்.

**உறுப்பினர் செயலர்**
புதுச்சேரி மாசு கட்டுப்பாட்டு குழுமம்.

' தூய்மையான இல்லம், தூய்மையான வீதி மற்றும் தூய்மையான நகரம் கொண்டிருப்போம் '

No.33/DIP/ADVT/2017-18